

# “பெண்ணுரிமை பேணும் இயக்கம் தி.மு.க.!”

கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஆறாவது அமர்வில் ‘உரிமை தந்து உயர்த்திய இயக்கம்’ என்ற தலைப்பில் திராவிடர் கழக மாணவர் அணி துணைச் செயலாளர் தேவ.நர்மதா அவர்கள் ஆற்றிய உரை :

“யாரை இந்தச் சமூகம் படிப்பதற்குத் தகுதியற்றவர்கள் என்று சொன்னதோ, யாரை இந்தச் சமூகம் பிறந்தாலே செலவு என்று சொன்னதோ, யாரை இந்தச் சமூகம் உரிமை பெற்றுவிடக் கூடாது என்று சொன்னதோ, அந்தப் பெண்ணினத்துக்கு உரிமை தந்து உயர்த்திய இயக்கம் இந்தத் திராவிட இயக்கம் என்பதை மறந்துவிடக் கூடாது.



**தேவ.நர்மதா**
**திராவிடர் கழக மாணவர் அணி துணைச் செயலாளர்**

### ஒரே தலைவர்

இங்கு எத்தனையோ மத சீர்திருத்தக்காரர்கள் இருந்தார்கள், எத்தனையோ தலைவர்கள் இருந்தார்கள். ஆனால், ஒரே ஒரு தலைவர் மட்டும்தான், ‘ஏம்பா முகத்துல இரண்டு கண்கள் இருக்கிறது, அதிலே ஒரு கண் நன்றாகத் தெரிந்து இன்னொரு கண் நன்றாகத் தெரியவில்லை என்றால் ஒரு மனிதன் சரியாக நடந்து போக முடியுமா? உடலில் ஒரு பாகம் நன்றாக இருந்து, இன்னொரு பாகம் செயலிழந்துவிட்டது என்று சொன்னால் மனிதனே நன்றாக இருக்க முடியாது என்று சொன்னால், இந்த இனத்தின் மக்கள் தொகையில் சரிபாதியாக இருக்கக்கூடிய பெண்ணினம் முன்னேறவில்லை என்று சொன்னால், இந்த நாடு நன்றாக இருக்க முடியுமா?’ என்று கேட்டார். அப்படி கேட்ட ஒரே தலைவர் அறிவுலகப் பேராசான் தந்தை பெரியார் மட்டும்தான். தந்தை பெரியாருக்குப் பிறகு வந்த, இந்த இயக்கம், பெண்களை மையப்படுத்தியே இங்கு ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்திருக்கிறது.



‘பெண் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாமா, வேண்டாமா?’ என்று சமூகம் யோசித்துக் கொண்டிருந்தபோது, ‘பெண்களைக் காவல் துறையிலும், ராணுவத்திலும் பணியமர்த்த வேண்டும்’ என்று தீர்மானம் போட்ட தலைவர் தந்தை பெரியார். அதைப் பின்னாளில் சட்டமாக்கி பெண்களைக் காவல் துறையில் பணியமர்த்திய தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்.

### பெண்களுக்கு வர்ணமில்லை

தந்தை பெரியாருக்கு முன்பு, பேரறிஞர் அண்ணாவுக்கு முன்பு, தலைவர் கலைஞர் அவர்களுக்கு முன்பு, பெண்கள் எப்படி பார்க்கப்பட்டார்கள்? நான்கு வர்ணங்கள் இருந்தன, இந்த நான்கு வர்ணங்களிலும் பெண்களுக்கு வர்ணங்கள் இல்லை. எந்த வர்ணத்தில் பிறந்தாலும் அவர்கள் சூத்திர பெண்கள்தான், அடிமைப்படுத்தப்பட வேண்டியவர்கள்தான். பெண்களுக்கு வர்ணம் கிடையாது, ஜாதியும் கிடையாது, ஊராவது உண்டா என்றால் அதுவும் கிடையாது. திருமணம் ஆவதற்கு முன்பு வரை, தந்தையின் ஊர்தான் பெண்களின் ஊர். திருமணத்துக்குப் பிறகு கணவரின் ஊர், பெண்களின் ஊர். திருமணத்துக்கு முன் தந்தையின் குலதெய்வம்தான் பெண்களின் குலதெய்வம், திருமணத்துக்குப் பின் கணவருடைய குலதெய்வம்தான் பெண்களின் குலதெய்வம். இப்படி பெண் இனத்துக்கு என்று தனி அடையாளம் இல்லாதபோது, ‘பெண்களின் பெயருக்குப் பின்னால், படித்து வாங்கி போடப்படுகிற பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம்., எம்.பி.பி.எஸ். என்ற பட்டங்கள்தான் பெண்ணினுடைய அடையாளம்’ என்று சொல்லி, பெண்களைப் படிக்கவைத்து அழகு பார்த்த இயக்கம் திராவிட இயக்கம்.

### பெண் கல்வி

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், எட்டாம் வகுப்பு வரை பெண்கள் படித்திருந்தால் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய பெயரில் நிதி உதவி வழங்கினார். ‘எட்டாம் வகுப்பு வரை படித்தால் இந்த நிதியுதவி அளிப்பேன் என்று சொன்னால், பெண்களை எட்டாம் வகுப்பு வரை படிப்பதற்கு இந்தச் சமூகம் அனுமதிக்கும்’ என்று சொல்லி, அந்த உதவித் தொகையில் புரட்சியை ஏற்படுத்திய தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்.

பெண்ணினத்தை அடக்கி, ஒடுக்கி வைத்திருந்த சமுதாயத்தில் பெண்களுக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டு, பெண்களுக்கும் வேலைக்குச் செல்கிற உரிமை உண்டு, குறிப்பாக, சொத்திலும் உரிமை உண்டு என்று இந்தியாவிலேயே முதன்முறையாகப் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கிய இயக்கம், இந்தத் திராவிட இயக்கம் என்று சொன்னால், தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து பெண்களும் தந்தைக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறார்களோ இல்லையோ, தாய்க்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறார்களோ இல்லையோ, தந்தை பெரியாருக்கும் பேரறிஞர் அண்ணாவுக்கும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருக்கும், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டினுடைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், கோட்டைக்குச் சென்று கையெழுத்து போட்ட முதல் ஐந்து கையெழுத்துகளில் ஒன்று, மகளிர் விடியல் பயணத்திட்டம்.

இந்த நூற்றாண்டு மட்டுமல்ல, இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும், இந்த இயக்கம் இருக்கும். இந்த இயக்கம் மகளிருக்கானதாக இருக்கும்.

விளையாட்டு வீராங்கனைகளாகப் பெண்கள் வந்துவிடக் கூடாது என்று சொன்ன இந்த சமுதாயத்தில், பெண்களை ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு அனுப்பிய மாநிலம் நம் தமிழ்நாடு. அப்படி ஆசிய கோப்பைக்குப் போன ஒரு பெண்ணிடம் ஆய்வு நடத்தி, பெண் தன்மையைவிட ஆண் தன்மை அதிகமாக இருக்கிறது. ஆகையால், அவர் பெற்ற பதக்கத்தை நாங்கள் திரும்ப பெற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அன்றைய முதல்வர் கலைஞர் தமிழ்நாட்டில் 10 லட்சம் ரூபாய் பரிசு அறிவித்து விட்டார். ‘பதக்கத்தை திரும்ப பெற்றுக்கொண்டார்கள். நீங்கள் கொடுத்த பத்து லட்சத்தை திரும்ப பெற்றுக்கொள்வீர்களா?’ என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது, உடனே கலைஞர் சொன்னார், ‘ஓடியது அந்தக் கால்கள்தானே’ என்று. எளிய மக்கள்மீது அந்த மனிதருக்கு எப்பேர்பட்ட அன்பு இருந்திருந்தால் இப்படிப்பட்ட வார்த்தைகளை உதிர்த்திருக்க முடியும்.

‘பெண்கள் பிள்ளை பெறுவதற்கான கருவி மட்டும் கிடையாது, இந்த நாட்டை உயர்த்திப் பிடிக்கக்கூடிய புரட்சி விதைகள்’ என்று சமுதாயத்தில் நிலைநிறுத்திய தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர். அந்தக் கலைஞர் கண்ட இயக்கம், தந்தை பெரியார் தந்த இயக்கம், இன்றைக்கு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் ஆளப்படுகிற இந்த இயக்கம், என்றைக்கும் சிறுபான்மையின மக்களுக்காக இருக்கும்; என்றைக்கும் பெண்ணினத்துக்கானதாக இருக்கும், என்றைக்கும் இளைஞர்களுக்கானதாக இருக்கும்.”

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

ராஜராஜன் ஆர்.ஜே.
முகநூல் பதிவு :

அறிவுத் திருவிழா என்பது ஒரு தற்செயல் நிகழ்வல்ல. திராவிட இயக்கத்தின் தொடர்ச்சியான அறிவு செயல்பாடுகளின் மகுடம்தான், நவம்பர் 8 தொடங்கி நவம்பர் 16 வரை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த ‘அறிவுத் திருவிழா’ நிகழ்வு.

திராவிட இயக்க மரபை மட்டும் அல்ல, அதன் அடுத்தகட்டத்தையும் காட்டி இருக்கிறது இந்த ‘அறிவுத் திருவிழா.’

1. காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூல் வெளியீடு – தமிழ்நாட்டின் தலைவர்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், செயல்பாட்டாளர்களைக் கொண்டு எழுதப்பட்ட நூல். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றை மட்டுமல்ல, தமிழ்நாட்டு வளர்ச்சியின் ஆவண சாட்சியாகவும் இந்தப் புத்தகம் திகழும்.

2. இருவண்ணக் கொடிக்கு வயது 75, இருநாள் கருத்தரங்கம் – பத்து அமர்வுகள் தமிழ்நாட்டின் தலைசிறந்த 44 பேச்சாளர்கள் கொண்டு நடத்தப்பட்ட கருத்தரங்கம். இன்னும் வாசிக்கத் தொடங்காத இன்றைய தலைமுறையிடம், திராவிடத்தைக் கொண்டுசேர்த்த நிகழ்வு இது.

3. முற்போக்கு புத்தகக் காட்சி மற்றும் மாலை நேர நிகழ்ச்சிகள் – சென்னையில் ஒவ்வோர் ஆண்டும் நடக்கும் புத்தகத் திருவிழாவில் பெரியாரிய, அம்பேத்கரிய, இடதுசாரி கருத்துகள் கொண்ட புத்தகங்கள் அதிகமாக விற்பனை ஆவதைச் செய்திகளில் பார்த்து வருவோம். ஆனால், முற்போக்கு புத்தகத் திருவிழா என்பது பலராலும் யோசிக்க முடியாதது. யோசிக்க முடிந்தாலும், செயல்படுத்த முடியாதது. ஆனால், யோசித்தும் செயல்படுத்தியும் காட்டி இருக்கின்றது திராவிட முன்னேற்றக் கழகம். செயல்படுத்திக் காட்டியிருக்கிறார் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர். இந்த விசயத்திலும் இந்தியாவுக்கு வழிகாட்டியாக இருக்கப்போவது நாம்தான்.

மாலை நேரத்தில் நடந்த கலைநிகழ்ச்சி மற்றும் உரைவீச்சு – கலைஞர் கட்டிய அழகிய வள்ளுவர் கோட்ட பின்னணியில் வெளியான படங்களைப் பார்த்தபோது, திராவிட பண்பாட்டு அரசியல், தமிழர் அற அரசியல் உணர்வு மேலெழுந்தது.

தமிழ்நாட்டுக்கென ஒரு சிந்தனை மரபு இருக்கின்றது. சித்தர் மரபு, பக்தி இலக்கிய மரபு, சிரமண மதங்களான பௌத்தம், ஜைனம், ஆசீவகம் காட்டிய மரபு, பண்டிதர் அயோத்திதாசர், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், பேராசிரியர் லட்சுமி நரசு போன்றவர்கள் காட்டிய மரபு என நமது பகுத்தறிவு சனாதன எதிர்ப்பு மரபு பெரியது. அதன் அடுத்தகட்ட பாய்ச்சலை நிகழ்த்தியது தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் மற்றும் திராவிடர் கழகமும் பேரறிஞர் அண்ணா தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகமும்.

இந்த சிந்தனை மரபின் மகுடம்தான் அறிவுத் திருவிழா!